

நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் முன்னிலையில் திசையன்விளை பேரூராட்சி 7வது வார்டு அ.தி.மு.க உறுப்பினர் ஆறுமுகத்தேவி அவரது கணவர் 6வது வார்டு அ.தி.மு.க செயலாளர் லிங்கராஜ் ஆகியோர் கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர். இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜான்ரபீந்தர்,மகளிர் அணி தலைவி கமலா நேரு,வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் செல்வ சூடாமணி,இளைஞர் அணி துணை அமைப்பாளர் முருகன்,லயன் சுயம்பு ராஜ்,நடேஷ்அரவிந்த்,அலெக்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் ஆவுடையப்பனிடம் கழக உறுப்பினர் படிவத்தை வழங்கினர்.



நேற்று முன்தினம் (01.07.2023) கடலூர் மாவட்டம், பிச்சாவரம் அறிஞர் அண்ணா சுற்றுலா வளாகத்தை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் இந்தியாவின் சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியின் கிளஸ்டர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்துதல் பணிகள் நடைபெறுவதை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ் உள்ளார்.

### ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் - புதுசத்திரம் ஊராட்சி - கம்பிளிநாயக்கன்பட்டி,

# புதுசத்திரத்தில் ரூ.22லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையங்கள்!

## ஊரக - வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார்!

ஆத்தூர், ஜூலை 2 - ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் புதுசத்திரம் ஊராட்சியில் கம்பிளிநாயக்கன்பட்டி மற்றும் புதுசத்திரத்தில் ரூ.22லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையங்களை ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி திறந்து வைத்தார். குழந்தைகள் முதல் மாணவர்கள் வரை பாதுகாப்பான கல்வியை தருவது தி.மு.க. ஆட்சியே என ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் புதுசத்திரம் ஊராட்சிக்கு உட்பட்ட கம்பிளிநாயக்கன்பட்டியில் ரூ.11லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையம் மற்றும் புதுசத்திரத்தில் ரூ.10.93ட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையம் மற்றும் அரண்மனையூரில் ரூ.7லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடங்கள் திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவரும், தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளருமான ப.க.சிவகுருசாமி தலைமை தாங்கினார்.

ஊரகவளர்ச்சி முகமை மாவட்ட திட்ட இயக்குநர் திலகவதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ராஜேஸ்வரி தமிழ்ச்செல்வன், புதுசத்திரம் ஊராட்சிமன்ற தலைவர் வி.லெட்சுமி, ஒன்றியகுழு உறுப்பினர்கள் விவேகானந்தன், நாகலெட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, மணிகண்டன், கூட்டுறவு வளர்ச்சி அலுவலர்கள் சக்கரவர்த்தி மணிமாறன், கனேசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் அங்கன்வாடி மையங்களை திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றிய பின்பு அங்குள்ள மழலையர்களுக்கு இனிப்புகளை வழங்கி அவர்களை வாழ்த்திய ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி பொதுமக்கள் மத்தியில் பேசும் போது திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்த பின்பு இரண்டு திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் முழுமையாக செயல்படுத்த உள்ளது. குறிப்பாக புதுசத்திரம் ஊராட்சியில் 9இடங்களில் மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டப்பட உள்ளது.

புதுசத்திரத்திற்கு மட்டும் தனியாக 60ஆயிரம் லிட்டர் கொள்ளவு உள்ள மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டஉள்ளோம். சென்ற அ.தி.மு.க. ஆட்சியின் போது காவிரி கூட்டுக்குடிநீர் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு முழுமையாக கிடைக்ககூடாது என்ற எண்ணத்தில் தேவையில்லாத இடத்தில் எல்லாம் காவிரி நீரை கொண்டு சென்றார்கள் ஆனால் இப்போது முழுமையாக காவிரி கூட்டுக்குடிநீர்; கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தினசரி குடி தண்ணீரை பெரும் நிலைமை உருவாகியுள்ளது. செப்டம்பர் மாதம் 1ம் தேதி முதல் குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் திட்ட பணிகள் முழுமையாக நடைபெற்று ஊராட்சிமன்ற தலைவர்கள் அந்தந்த ஊராட்சிகளில் செப்டம்பர் 15 முதல் வழங்க உள்ளார்கள்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுபடி குக்கிராமங்களில் கூட தரமான தார் சாலைகள் அமைக்கப் பட்டு வருகிறது. இது போல கிராமங்களை நகர்களுடன் இணைக்கும் தார்சாலைகளுக்கு முக்கியத்துவம் அளித்து தார் சாலை அமைக்கப்படுவதால் கிராம விவசாயிகள் தங்களின் விளை பொருட்களை எளிதாக நகரங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யகூடிய நிலைமை உருவாகியுள்ளது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பூங்கொடி, ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக தாசில்தார் நவநீதகிருஷ்ணன், ரெடடியார்சத்திரம் ஒன்றிய துணைப்பெருந்தலைவர் ராஜேஸ்வரி தமிழ்ச்செல்வன், மாவட்ட கவுன்சிலர் சுப்புலெட்சுமி சண்முகம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மலரவண், கிருஷ்ணன், குழந்தைகள் வளர்ச்சி திட்ட வட்டார அலுவலர் மெர்லின் அண்ணமலர், வட்டார காங்கிரஸ் தலைவர் வி. முருகேசன், புதுசத்திரம் ஊராட்சிமன்ற துணைத்தலைவர் கிருஷ்ணவேனி காளியப்பன், மாவட்ட பிரதிநிதி எல்லை ராமகிருஷ்ணன்,

ஆத்தூர் சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வம், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரமேஷ், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், டி.புதுப்பட்டி தி.மு.க. கிளைச் செயலாளர் உதயக்குமார், புதுசத்திரம் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் பார்வதி, செல்வராணி, வெள்ளையம்மாள், அனிதா, காந்திமதி, சண்முகதாய், ஊராட்சி செயலாளர் செந்தில்முருகன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக ஊராட்சி மன்ற தலைவர் லெட்சுமி நன்றி கூறினார்.

# தேவக்கோட்டை வடக்கு ஒன்றியம் நாகாடியில் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் சிறப்புரை!

சிவகங்கை, ஜூலை 3- சிவகங்கை மாவட்டம் நாகாடியில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் பொதுக்கூட்டம். கேஆர்.பெரிய கருப்பன் , மு.தென்னவன், சரத் பாலா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சிவகங்கை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் பொதுக்கூட்டங் கள் நடைபெற்று வருகிறது. இதில் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை வடக்கு ஒன்றியம் நாகாடியில் ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் பூபாலசிங்கம் தலைமையில் தலைவர் கலைஞர் நுற்றாண்டு பிறந்தநாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டுறவு சங்கத் தலைவர் சிலை. இராமசாமி வரவேற்றுப் பேசினார்.

பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் முன்னாள் அமைச்சர் முதென்னவன் தலைமைக்கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா, மாவட்ட கழக துணை செயலாளர் த. சேங்கை மாறன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பொதுக்கூட்டத் தில் மாவட்ட கழக துணை செயலாளர் திருமதி ஜோன்ஸ்ருசோ,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், தெற்கு ஒன்றிய செயலாளர் நாகனிரவி பொதுக்குழு உறுப்பினர் மதார்சேட், காரைக்குடி நகர்மன்ற தலைவர் எஸ். முத்து துரை , தேவகோட்டை நகர செயலாளர் பெரி. பாலா, ஒன்றிய கழக நிர்வாகிகள் சுப .மணி சுப்பிரமணி, பெரியசாமி, மேனகா, மதிவாணன், செங்கோல் ராஜ் அன்பழகன், இளங்கோ, முரசொலி, ஆதி, வினோத், செந்தில்குமார், இளைஞரணி சுரேஷ் ,ஒன்றிய கவுன்சிலர்கள் திலகவதி பூபால சிங்கம், ஜான்சி ராணி சூசைராஜா, சி.பாண்டி, கோட்டைச்சாமி மற்றும் ஊராட்சிக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டார்கள், விழாவில்பல் வேறுநலத் திட்ட உதவிகளை அமைச்சர் பெரியகருப்பன், மு . தென்னவன், ஆகியோர் வழங்கினார்கள்.

கிளைக் கழகச் செயலாளர் ராமநாதன் நன்றி கூறினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பூபால சிங்கம் தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.





சிவகங்கை மாவட்டம் காளையார் கோயில் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் கே.சொக்கநாதபுரத்தில் தலைவர் கலைஞர் நூற்றாணாடு பிறந்த நாள் பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் சிறப்புரையாற்றினார். உடன் தலைமைக்கழக பேச்சாளர் தூத்துக்குடி ச ரத்பாலா, மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.எம்.கென்னடி, மற்றும் நிர்வாகிகள் உள்ளார்கள்.

### ஆளுநர்கள் அரசியல் சாசனத்தை படிக்க வேண்டும்!

# முதலமைச்சரை கலந்தாலோசிக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி செயல்படுவதா?

## ‘டெக்கான் கிரானிக்கிள்’ நாளேடு தலையங்கம்



DECCAN Chronicle

1 JULY 2023

Why governors need to study the Constitution

There are still a few people in this country who are unaware of the fact that India is a democratic republic governed by a Constitution its people gave to themselves some 73 years ago, and sadly, most of them occupy Raj Bhavans. They run roughshod over elected legislatures and councils of ministers accountable to them, thinking that the governors in Independent India enjoy the same level of power and immunity as the governors of the Raj. They sit over pieces of legislation passed by state Assemblies and pick and choose some to sign while keeping the legislatures in the dark over the others. They, in short, undermine the very idea of democratic governance and constitutional propriety.

One of the worst displays of gubernatorial excesses in Independent India was orchestrated by Tamil Nadu governor R.N. Ravi who on Thursday issued an order dismissing a minister without consulting the chief minister, only to retract in hours. The timely intervention and advice of Union home minister Amit Shah to the governor to seek the advice of the Attorney General of India has saved the Union government the blushes though it cannot distance itself completely from the wrongdoings of the governor. The governor, in his letter to the chief minister dismissing the minister, said that he was "conscious of the fact that, under ordinary circum

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் விதிமுறை களை மாநில ஆளுநர்கள் படித்து, அதன்படி வழிநடக்க வேண்டும் என்று ‘டெக்கான் கிரானிக்கிள்’ நாளேடு தனது தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

சுமார் 73 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கிய அரசியலமைப்பால் நிர்வகிக்கப்படும் ஒரு ஜனநாயகக் குடியரசாக இந்தியா உள்ளது என்ற உண்மையை அறியாத ஒரு சிலர் இந்த நாட்டில் இன்னும் இருக்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக அவர்களில் பெரும்பாலோர் ராஜ்பவன்களை ஆக்கிரமித்துள்ளனர். சுதந்திர இந்தியாவில் ஆளுநர்கள் ஆங்கிலேய அரசு அல்லது அவர்களது தளபதிகளுக்கு இணையான அதிகாரத்தையும், விதிவிலக்கையும் அனுபவிப்பதாக நினைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள் மற்றும் அமைச்சரவைகள் ஆகியவை தங்கள் பொறுப்பில் இருப்பதாக நினைத்து முரட்டுத்தனமாக செயல்படுகிறார்கள்.

அவர்கள் மாநில சட்டமன்றங்கள் நிறைவேற்றிய சட்டங்களின் மீது அமர்ந்து கொண்டு சிலவற்றைத் தேர்ந்தெடுத்து கையெழுத்திடுகிறார்கள். அதே நேரத்தில் அந்த சட்டமன்றங்கள் செயல்படுவதில் இருட்டடிப்பு செய்கிறார்கள். சுருக்கமாகச் சொல்வதென்றால் அந்த நிலைப்பாடு கள் ஜனநாயக ஆட்சி மற்றும் அரசியலமைப்பு உரிமை என்ற கருத்தாங்களை குறைவான மதிப்பிற்கே உட்படுத்துகின்றன.

சுதந்திர இந்தியாவின் மிக மோசமான அப்படிப்பட்ட அத்துமீறல்களில் ஒன்றாக தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என். ரவி, மாநில முதல்வருடன் கலந்தாலோசிக்காமல் ஒரு அமைச்சரை வியாழக்கிழமை அன்று டிஸ்மிஸ் செய்து உத்தரவு பிறப்பித்துள் ளார். அது சில மணி நேரங்களிலேயே திரும்பபெறப்பட்டும் உள்ளது. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா சரியான நேரத்தில் தலையிட்டு கவர்னருக்கு அட்வகேட் ஜெனரலின் ஆலோசனையைப் பெற அறிவுறுத்தியதன் மூலம் ஆளுநரின் தவறுகளில் இருந்து மத்திய அரசு முற்றிலுமாக காப்பாற்றாவிட்டாலும், ஓரளவாவது விலகச் செய்திருக்கிறது. அமைச்சரை பதவி நீக்கம் செய்வதாக முதல்வருக்கு ஆளுநர் எழுதியுள்ள கடிதத்தில் “வழக்கமான சூழ்நிலைகளில் தான் ஒரு ஆளுநர் அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் செயல்படுகிறார் என்ற உண்மையை நான் அறிவேன்” என்று குறிப்பிட்டுள்ளார். “அரசமைப்புச் சட்ட விதிகளின்படி மாநில அரசை நடத்த முடியாது” என்று குடியரசுத் தலைவர் ஆட்சியை மீண்டும் அமல்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற அசாதாரணமான சூழ்நிலையில்தான் ஆளுநர் சுயமாக செயல்பட முடியும் என்ற அரசியலமைப்பு விதிகளை தவறாகப் புரிந்து கொண்டதாகத் தெரிகிறது.

அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் எப்போது செயல்பட வேண்டும் என்பதை முடிவு செய்யும் அதிகாரத்தை அவர் தன்னிடமே வைத்துக் கொள்ளவும் முடியாது. அரசமைப்புச் சட்டம் ஆளுநருக்கு, முதலமைச்சர் அறிவுரை வழங்குவதைப் பற்றிப் பேசுகிறதே தவிர அதற்கு நேர்மாறாக எதுவும் கூறவில்லை என்பதால் அமைச்சரைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டாம் என்று முதலமைச்சருக்கு ஆளுநர் அறிவுரை அளிப்பது தவறானது. “ஆளுநர் என்பவர் மாநில அரசின் சுருக்கெழுத் தாக செயல்படுவர் என்றும், குடியரசுத் தலைவர் என்பவர் மத்திய அரசின் சுருக்கெழுத்தாக செயல்படுபவர் என்றும் என்று உச்ச நீதிமன்றம் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளதை இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

நீதிமன்றக் காவலில் இருக்கும் அமைச்சரைத் தொடர்ந்து சட்டமன்றத்தில் நீடிப்பது “சட்டத்தின் சரியான செயல்முறைக்கு இடையூறாகவும், நீதியின் போக்கை சீர்குலைக்கும்” என்ற அச்சம் இருப்பதாக ஆளுநர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். சென்னை உயர் நீதிமன்றம் உட்பட பல்வேறு நீதிமன்றங்கள் இந்த வழக்கின் பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து வருகின்றன. மேலும் நீதியின் போக்கு பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் உள்ளன. மேலும், இந்த வழக்கை விசாரிக்கும் கூட்டாட்சி அமைப்பான அமலாக்க இயக்குநரகம் நீதிமன்றத்தை நாடுவதை எதுவும் தடுக்கவில்லை.

1951ம் ஆண்டு அரசியலமைப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் ஆகியவை ஒரு குடிமகன் எம்.எல்.ஏ அல்லது எம்.பி ஆவதற்கான தகுதிகளை வரையறை செய்துள்ளன. அதிகாரப் பதவிகளை வகிக்கும் கிரிமினல் குற்றச் சாட்டுக்களை எதிர்நோக்கும் நபர்களின் விருப்பத்திறன் பற்றிய விவாதம் வரவேற்கத்தக்கது. ஆனால் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் சட்டத்தின் சரியான செயல்முறையைப் பின்பற்ற வேண்டும்.

இந்த வகையில் ஒவ்வொரு முறையும் அட்டர்னி ஜெனரலுக்கு இப்படிப்பட்ட சுமையை அளிப்பதற்கு பதிலாக, நியமனத்தை அறிவிப்பதற்கு முன்பாக ஆளுநர்கள், வேட்பாளர்களை அரசியல் சாசன விதிகளின் அடிப்படையில் ஆராயும் வழிமுறைகளை ஒன்றிய அரசு ஏற்படுத்துவது நல்லது. அதன் பிறகு, அரசியலமைப்பைப் பாதுகாப்பது ஒன்றிய அரசின் பணிகளில் ஒன்றாகவும் இருக்கப் போகிறது.

இவ்வாறு டெக்கான் கிரானிக்கிள் நாளேடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை எஸ்.ஏ. இராஜமாணிக்கம்

**ஜூலை 3 (1998)**



**சுயமரியாதை இயக்க ஆரம்பகால தொண்டர், திராவிட முன்னேற்றக் கழகத்தில் வட்டச் செயலாளர் பொறுப்பில் தொடங்கி நகரச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை ஏற்று கோவை மாவட்டத்தில் கழகம் வளர்க்க அரும்பாடுபட்டவர்.**

**கோவை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் தங்கியிருந்தபோது, அன்றாடம் கலைஞர் அவர்களை சந்தித்து உரையாடக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.**

**நகர்மன்ற உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.**

**மும்முனைப் போராட்டம், கருப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**